குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
பாயப்புலி
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

வேதாத்திரியப் பார்வையில்

தாயுமானவரின் பாயப்புலி

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. நின் பெருங்கருணை தாய்ஒத்து
2. வினைப்பதிவு வித்தில் உண்டு
3. தவஞ்சற்று மில்லாத நான்உன்
4. மவுனத்தினால் முத்தி சாதிக்கலாம்
5. மௌனியே சற்குருவாய்
6. அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்?
7. சீடரிடம் கொண்ட குருவின் அன்பு
8. சும்மா இருக்கின்ற சீரறியச் செய்தல்
9. நீயென நானென வேறில்லை
10. வேதாத்தரியத்தில் அட்டாங்க யோகமா?

1.நின் பெருங்கருணை தாய்ஒத்து

குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும்.

இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தது.

கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள்

இருக்குமே தவிர இப்படி லட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.

ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக் கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப்பிடியில நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது.

குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில் பட்டது.

நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது.

அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும்.

அந்த மிளா மான் ஆற்றில் இறங்கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது.

ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. ரப்பர் போன்ற தனது

உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன.

மான் கரையேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்தது அந்த மான்.

சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியில் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

“அம்மா” என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றி து.

மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

“ஆமாம்.... ஏன் அழுகிறாய்” என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது.

“இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்” என்றது.

“நான் எப்படி உதவ முடியும்?” என்றது.

“மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல் பழங்களை எடுத்து

என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு” என்றது மான்.

“நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்திரவாதம்?”

“நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு”

“உன்னை விட்டால் என்னால் பிடிக்கமுடியாது? உன் வேகம் என்ன, என் வேகம் என்ன?” என்றது குறட்டி.

“என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயே அதற்கு நான் கட்டுப்படுகிறேன்”

“நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்த படியே செல்ல வேண்டும்” என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக் கொண்டது. குறட்டியை சுமந்தபடியே சென்றது மான்.

மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்றது. நாவல் பழங்களை சேகரித்துக் கொண்டது.

மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க உற்சாகத்துடன் நடந்தது.

தனது அம்மாவுக்காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது அதற்கு சந்தோஷமாக இருந்தது.

மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

“நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால்.... அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்” என்றது குறட்டி.

“நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். என் வார்த்தையை மீறமாட்டேன்” என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான் குட்டி.

குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்து கொண்டது.

அங்கு அதற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன.

அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும்.

இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப்பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மாலைப் பாம்பு அங்கேயே உயிரை விட்டது.

பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

“கையில் கிடைத்ததை விட்டு விட்டோமோ?” என்று கூட ஆதங்கமாக இருந்தது.

எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. குறட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர ஏதோ அரவம் கேட்டது.

அதே மான்குட்டி தனியாக வந்தது.

“என் கடமை முடிந்தது... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன்.....உனக்கு எனது நன்றி” என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான்குட்டி.

குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது. “என்னைப் பற்றியா சொன்னாய் என்றது குறட்டி

“இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன்.”

“உன்னை கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்?”

“நீ சொன்னது சரிதான்.. ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விஷயம் உலகத்தில் வேறு என்ன இருக்க முடியும்?”

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

“தாய்க்காக தனது உயிரை தரத்துணிந்த உன்னை வணங்கினாலே ....எனக்குப் பெருமை என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது.

மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்தது.

மரக்கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.

பாயப் புலிமுனம் மான்கன்றைக் காட்டும் படிஅகல
மாயைப் பெரும்படைக்கே இலக்காஎனை வைத்தனையோ?
நீ எப்படி வகுத்தாலும் நன்றே, நின் பெருங்கருணை
தாய்ஒத்து அடியார்க்கு அருள்சச்சி தானந்த தற்பரமே. (தா.பா.401)

- தாய்போல் பெருங்கருணை கொண்டு அடியார்க்கு அருளும் சத்து சித்து ஆனந்த தற்பரமே!
- பாய்ந்து வரும் புலிக்கு முன்னால் மான் தனது கன்றினைக் காட்டினால் எப்படியோ, அப்படி மாயையாகிய பெரிய எதிரிக்கு முன்னர். என்னை பலியாக்க நினைத்தனையோ? நீ
- எப்படி முறை செய்தாலும் அதுவும் நல்லதே

அறிந்தது சிவம், மலர்ந்தது அன்பு? வேதாத்திரியம்

இறைவனிடம் ஏதோ பெற வேண்டும் என்று நினைக்கிறபோது அது உணர்வு தான் அவனே தான் இந்த நிலையிலே சிக்கிக் கொண்டு அந்தந்த இடத்துக்குத் தக்கவாறு இன்பத்தையும் அனுபவிக்கிறான்; துன்பமும் அடைகிறான்.

அந்த இடத்தில் நான் அந்தத் துன்பத்தை நீக்க வேண்டும் என்ற கருணையானது உள்ளத்திலே எழுமேயானால் அதுதான் உறவு.

அந்த உறவை, உண்மையான உறவை, அவனோடு கொண்ட போது அதிலிருந்து அறம் எப்படி உண்டாகிறது?

சேவையாக உண்டாகிறது. அப்பொழுது, அறிந்தது சிவம். இங்கே என்ன? காட்டுவது அன்பு.

சிவம் என்ற ஒரு நிலையை அறிவு உணர்ந்தது; அது செயல்படும்போது அன்பாக மலர்ந்தது.

அப்பொழுது அன்பு என்பது என்ன என்று பார்க்கும்போது சிவத்தின் செயலே; பூரணமாக சிவத்தின் செயலே. செயலிலே விளைவாக எப் பொழுதும் வந்து கொண்டிருப்பது சிவத்தின் செயல்.

ஆகவே, நல்ல செயலையே செய்வேன் என்று ஒவ்வொருவரும் உணர்ந்து மதித்து அந்த உறவு கொண்டு கடமையாற்றி வருவது அதுவே சிவயோகம், எப்பொழு துமே சிவயோகம் தான்.

எந்தப் பொருளிலேயும் அவனைக் காணலாம்; எந்த நிலையிலேயும் அவனைக் காணலாம்;

அவனாகவே இருக்கலாம். அவனோடு உறவாக இருக்கலாம்; உறைந்து இருக்கலாம்.

உடலால் வேறுபட்டு இருந்தாலும் உள்ளத்தால், அறிவால், ஒன்றுபட்டு இருப்பதை உணரலாம்.

இந்த நிலைக்கு அறிவை உயர்த்தவல்லது, அறத்தை உணர்த்தவல்லது தவமும், அகத்தாய்வும்;

அந்த தவமும் அகத்தாய்வும் நீங்கள் பெற்று விட்டீர்கள், செய்து கொண்டு வருகிறீர்கள், அதனுடைய பலனை உணர்ந்து கொண்டும் இருக்கிறீர்கள்.

அதனை ஆழமாக மேலும் ஆழமாகச் சிந்தித்துச் செயல்படுத்தி பயனடையுங்கள். நீங்களும் பயனடைந்து மற்றவர்களுக்கும் அந்தப் பயன் வீசட்டும்.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

2. வினைப்பதிவு வித்தில் உண்டு

மனிதனின் வினையை அழிக்கும் சக்தி யாருக்கு தான் உண்டு?

ஒரு ஒரு மனிதனுக்கும் ஒன்பது விதமான கர்மங்கள் உண்டு என்று அகத்தியர் சொல்கிறார் .

இவைகள் தான் நவக்கிரக அமைப்பில் நம்மை ஆட்டி வைக்கிறது .

ஒரு ஒரு கிரக தேவதைகளும் ஒரு ஒரு கர்மத்தை நமக்கு செய்ய வைக்கும், செய்த வினைக்கு தண்டனையும் தரும்.

இதை தடுக்க இதில் அஷ்ட கர்ம சாந்தி என்று ஒரு பூசையே உண்டு.

இதை சித்த வழிபாடு செய்யும் நபர்கள் அறிவார்கள்.

இப்படி வினைகளை சுமந்து தான் எல்லோரும் பிறக்கிறோம்.

ஒன்பது தேவர்களில் கேது மட்டும் ஞான கிரகம் என்றும் இவருக்கு பரிகாரம் கிடையாது என்று சொல்ல படுகிறது.

வினைகள் முழுவதும் அழிந்தவுடன் ஞான கேதுவின் ஆசியுடன் சித்தர்கள், மகான்கள் நம்மை அழைத்து செல்வார்கள்.

இந்த ஒன்பது தேவர்களை சிவ முறையாம் சைவ நெறிகளில் காணலாம்.

ஆம் நீங்கள் ஒன்பது தேவர்கள் உடைய வைணவ கோவிலை கண்டது உண்டா?

இருக்க முடியாது காரணம் அவர்கள் ஒன்பது தேவர்களை தேவதைகள் என்று ஒதுக்கி விட்டார்கள்.

எந்த சிவன் கோவிலுக்கு போனாலும் ஒன்பது நபர்களை காணலாம்.

சமய சைவ நூலில் கிரக ம் கள் வழிபாடு செய் த சிவன் கோவில்கள் என்று நிறைய கோவில்கள் சொல்ல பட்டு உள்ளது .

சைவ நெறியில் உள்ள அமைப்பின் படி கர்மங்களை செய்ய வைக்கும் தேவர்களையும் அசுரர்களையும் அடக்கும் அமைப்பு உள்ளது என்று நாம் அறிந்து கொள்ளலாம் .

இந்த சைவ நெறியில் முழுவதும் நாம் நம்மை ஈடு படுத்தி கொண்டும், தேவதைகள் ஆசிகள், தெய்வங்ளின் ஆசிகளை பெற்றாலும் முழுமையாக கர்மத்தை/வினைகளை அழிக்க முடியாது

எப்படிதான் அழிப்பது? இதற்கு தீர்வு..

இந்த வினைகளை அழித்து நம்மை சுத்த படுத்திக்கொள்ள இரண்டு வழிகள் தான் உண்டு ஒன்று அனுபவிப்பது அடுத்து தவம் இருந்து இறைநிலை அடைவது ....

தேவதைகளும், தெய்வமும் தவம் இருந்து இறைநிலைகளை அடைந்து கொள்ளும், நாம் அவைகளை வழிபாடு செய்யும் பொழுது நம்முடைய கர்மத்தை தடுத்து அல்லது அழிக்க வழிகளை மட்டும் சொல்லும்.

பிராந்தையர் என்னும் சித்தர் யானை கால் நோயுடன் அவஸ்தை பட்ட பொழுது காளி தேவி அவரிடம் தோன்றி உடலை சரி செய்கிறேன் என்றதும் அவர் வேண்டாம் கர்மத்தை அனுபவித்து கழிக்க வேண்டும் என்று மறுத்து விட்டார் ...

ராமகிருஷ்ண பரமஹம்சர் புற்று நோயால் அவஸ்தை பட்ட பொழுது விவேக அனந்தர் தாங்கள் வைத்திய முறைகளை எடுத்து கொள்ளலாம் என்று சொன்ன பொழுது அவர் வினைகளிடம் இருந்து தப்பினால் மீண்டும் அடுத்த பிறவி கொடுத்து தொடர்ந்து வரும் அ கவே வேண்டாம் என்று மறுத்து விட்டார் .

ஞானிகள் சொல்வார்கள் கஷ்டத்தை ரசித்து அனுபவிக்க வேண்டும் என்பார்கள்.

கர்மத்தை கழிக்க /வினைகளை கழிக்க தவம் செய்ய வேண்டும் என்று ஞானிகள் சொல்கிறார்கள்.

ஐந்து எழுத்து மந்திரம், எட்டு எழுத்து மந்திரம் ஆறு எழுத்து மந்திரம் சொல்வதால் அந்த தெய்வங்களை வசபடுத்தலாம் அன்றி ஒரு பொழுதும் வினைகளை அழிக்க முடியாது..

தவம் என்பது பிடிவாதம் என்று சொல்லலாம்.

சித்தர்களை அடைந்தாலும் வினைகளை அழித்து விடுவார்கள் ...

எந்த சமயத்தை பின்பற்றினாலும் ஒலி ஒளியாகியே இறைவனை கண்டவர்களும் அடைந்தவர்களும் மட்டுமே நம்முடைய வினைகளை அழிக்க முடியும் ......

இந்த பொன் வெளிச்சத்தை பார்த்த சித்தர்கள் இதை எப்படி அடையலாம் என்று சொல்லி உள்ளார்கள் அதை கண்டு அறிந்து நாம் செய்தால் நாமும் அந்த வெட்ட வெளியை காணலாம் ... உங்களுக்கும் நல்லதாய், ஊருக்கும் நல்லதாய் நினைப்பதும், செய்வதும் நித்தியகடன்

தற்பர மாஞ்சிற் பரமாகி மன்றந் தனில்நடித்து
நிற்பர்அம் போருகன் மால்பணி நீதரென் நெஞ்சகமாங்
கற்பரந் தாங்குக் கரைந்திட வானொத்த காட்சிநல்கும்
பொற்பர மாயென் வினைக்கருந் தாதைப் பொடிசெய்ததே(தா.பா.402)

- தன்னில் தானாக பூரித்து நிற்கும் ஞானச் சுடராகி,
- பொன்னம்பலத்தில் நடனம் செய்வார்.
- தாமரை மலரில் எழு நதரு ளி இருக்கும் பிரம்மனும் திருமாலும் பணிந்து வணங்கும் பாங்கு உடையவர்.
- என்னுடைய கல் போன்ற மனம் உருகிட,
- மேலான திருவருள் வீழ்ச்சியை நல்கினார்.
- அழகிய அரம்போல் நின்று,
- என்னுடைய வினைகளாகிய இரும்பை அராவி. பொடி செய்து அருளினார்.

”பழைய கொடிய வினையாகிய நோய் என்னை வாட்டும்போது இரும்பை அராவி. பொடி செய்து அருளினார்.!” என பெருமைப்படும் தாயுமானவருக்கு வினைப்பதிவு பற்றி தெளிவுபடுத்துகிறது வேதாத்திரியம்.

முன்னோர் செய்த வினைப்பதிவு வித்தில் உண்டு
மூளையிலே உன் செயலின் பதிவனைத்தும் உண்டு.

பின்னேநீ செய்வினைக்குப் புலனைந்தும் இயக்கிப்
பெற்ற பழக்கப்பதிவு உண்டு இம்மூன்றும்,
உன்னைநீ உள்ளுணரும் அகத்தவத்தை ஆற்றி,
ஒவ்வொன்றாய்ப் பழிப்பதிவை அகற்றிவர வேண்டும்.
தன்னில் பதிவான வினைப் பதிவுகளை மாற்றி,
தணிக்க பொருள், செல்வாக்குப் பயனாகாதுணர்வீர்"
(ஞாக.பா.1283)

மனிதர்கள் அனைவரும் இருபத்தி மூன்று ஜோடி குரோமோசோம்களால் உருவாகியிருக்கிறார்கள்.

அதில் ஒரு ஜோடி குரோமோசோம்கள் பாரம்பரியமான தன்மைகளை எல்லாம் உள்ளடக்கமாகப் பெற்றுள்ளதாக மருத்து விஞ்ஞானம் சொல்லுகிறது.

நம்முடைய முன்னோர்கள் உடலையும் மனதையும் இயக்கிப் பெற்ற செயல் பதிவுகள் அனைத்தும் நமது பெற்றோர் மூலம் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன் தரத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது முதல் இதுவரையில் செய்த அனைத்துப் பதிவுகளும் மூளை செல்களில் எண்ணமாக உள்ளது.

அந்த எண்ணங்களே சொல்லாக, செயலாக, விளைவாக, பழக்கமாக வழக்கமாக மலர்ச்சி பெற்று ஐந்து புலன்கள் மூலம் செயல்களாற்றிப் பெற்ற அனுபவப் பதிவுகளும் உள்ளன. அவற்றில் நல்வினை தீ வினை என்ற இரு பிரிவுகளும் உள்ளன.

தன்னை அறியும் உள்ளுணர்வு தவமாகிய அகநோக்குப் பயிற்சி செய்து பாவப் பதிவுகளாகிய பழிச் செயல் பதிவுகளை நீக்கி வர வேண்டும்.

பொருளோ செல்வாக்கோ தீ வினைகளாகிய பழிச்செயல் பதிவுகளை மாற்றிக் கொள்வதற்கும் குறைத்துக் கொள்வதற்கும் பயன்படாது என்பதை உணர்வீர்களாக.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

3. தவஞ்சற்று மில்லாத நான்உன்

மனத்தை ஐம்பொறிகளின் வழியே போக ஒட்டாமல், நிலைநிறுத்திக் கொள்ளும் வண்ணம், பல விரதங்களை மேற்கொண்டு, உணவைச் சுருக்கிக் கொள்ளுதலும், கோடைக் காலத்தில் காய்கின்ற வெயிலில் நிற்றலும், மழைக் காலத்தில்,

மழையிலும், பனிக்காலத்தில் பனியிலும் இருத்தலும், நீர் நிலைகளில் நிற்றலும் ஆகிய செயல்களைக் கடைப்பிடித்து, அச் செயல்களால் **தம்முடைய உயிருக்கு வரும் துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டு, பிற உயிர்கள்பால் அருள் உடையர் ஆதல் தவமாம்.**

சித்திரை மாதம் முதல் ஆடி மாதம் வரை உள்ள வெயில் காலத்தில், வெயில்படும் இடத்தில் நின்றுகொண்டு இருத்தல். "வெயில்நிலை நிற்றல்" என்றதனால்,

நாற்புறமும் தீயானது சூழ, மேலே சூரியனின் கதிர்கள் படுவதான பஞ்சாக்கினி மத்தியில் இருத்தல் என்பதும் கொள்ள வேண்டும்.

ஆவணி மாதம் முதல், கார்த்திகை மாதம் வரை உள்ள மழைக் காலத்திலும், மார்கழி மாதத்துப் பனியிலும், ஏரி, மடு, ஆறு போன்ற நீர்நிலைகளிலும் நின்றுகொண்டு இருத்தல்.

இவை அல்லாமல், ஈரத் துணியைப் போர்த்திக் கொண்டு இருத்தல், பட்ச உபவாசம், மாத உபவாசம் இருத்தல், மரத்தின் கீழ் வசித்தல் ஆகியவை தவநிலையில் அடங்கும்.

இவையெல்லாம், மனதைச் செம்மைப் படுத்துவதற்
காகவும், ஒருநிலைப் படுத்துவதற்காகவும் அமைந்தவை.

"மனம் அது செம்மையானால், மந்திரம் செபிக்க வேண்டாம்".
எனவே, மந்திரத்தை செபிப்பதே, மனதைச் செம்மைப் படுத்துவதற்குத்
தான்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா;
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா;
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா;
மனமது செம்மையானால் மந்திரம் செம்மை ஆமே.

என்பது "அகத்தியர் ஞானம்" என்னும் நூலில் வரும் பாடல்.

"தவம்" என்னும் இந்த அதிகாரத்துள் வரும் முதல் திருக்குறளில்,
"உணவைச் சுருக்குதல் முதலியவற்றால் தமக்கு வரும்
துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்க்குத் துன்பம்
செய்யாமையுமே தவத்திற்கு வடிவம் ஆகும்" என்கின்றார்
வள்ளுவர்.

மற்ற விரதங்கள் எல்லாம், உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு
உறுகண் செய்யாமை என்னும் என்னு ம் இந்த இரண்டிலே
அடங்குவதால், இதுவே தவத்திற்கு இலக்கணம் ஆகத் திருவள்ளுவ
ரால் வைக்கப்பட்டது.

ஒருவர்க்கு உடலுக்கோ உள்ளத்துக்கோ, இயற்கையாகவோ அல்லது
செயற்கையாகவோ, அவரவர் பிராரத்த வினைக்கு ஏற்ப துன்பங்கள்
நேர்கின்றன. அவற்றை எல்லாம் பொறுத்துக் கொள்ளுதலே
"உற்றநோய் நோன்றல்" ஆகும்.

துன்பங்கள் நம்மை வாட்டும்போதோ, பிறர் நமக்குச் செய்த
தீமைகளை நினைக்கும்போதோ, தாங்க முடியாமல் பொங்கி எழுவது
இயல்பு.

தமக்கு வந்த துயரைப் பொறுத்துக்கொள்ள மாட்டாமையே, உலகில் பலப்பல துயர்களும், தனிமனிதனையும், சமூகத்தையும் சூழுவதற்குக் காரணமாக அமைந்து விடுவதை நன்கு அறியலாம்.

துன்பத்தைத் தாங்குதற்கு உரிய, அறிவு நுட்பமும், மனத்திண்மையும் பெற்றிருக்க வேண்டும். துன்பம் பொறுத்தல் தவத்தைச் செய்வது ஆகும்.

தன் னலம் கருதித்தான் மற்ற உயிர்களுக்கு ஒருவன் துன்பம் செய்கின்றான். தன்னலம் அற்றுவிட்டால் துன்பம் செய்யும் எண்ணம் எழாது.

மேலும், தமக்கு உண்டாகும் துன்பங்களைத் தாங்கிப் பழகியவர்க்கு, அதன் வேதனை புரிவதால், அத்துன்பத்தைப் பிறர்க்குச் செய்யக் கருதமாட்டார்.

"நோய் எல்லாம் நோய் செய்தார் மேல ஆம், நோய் செய்யார் நோய் இன்மை வேண்டுபவர்" என்னும் திருக்குறளால் இது அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில், நல்லது செய்ய முடியவில்லையானாலும், துன்பத்தைச் செய்யாமல் இருக்கவேண்டும் என்னும் எண்ணம் தோன்றும்.

"பல் சான்றீரே! பல் சான்றீரே!
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பயன் இல் மூப்பின் பல் சான்றீரே!
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ?
நல்லது செய்தல் ஆற்றீர், ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்
எல்லாரும் உவப்பது, அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே."

என்பது புறநானூறு.

பலவாகிய நற்குணங்கள் அமையப் பெற்றவர்களே! பலவாகிய நற்குணங்கள் அமையப் பெற்றவர்களே!

மீனின் முள்ளைப் போன்ற நரைத்த முடியையும், சுருங்கிய கன்னக் கதுப்புகளையும் உடையதும், யாருக்கும் பயன் அற்றதும் ஆகிய முதுமைப் பருவத்தை அடைந்துள்ள, நல்ல குணவான்களே!

மழு என்னும் கூர்மையான படைக்கலத்தை உடைய, மிகுந்த வல்லமை கொண்டவன் ஆகிய ஒருவன் (எமன்) உங்கள் உயிரைப் பற்றி இழுத்துச் செல்லும்போது, நீங்கள் வீணாக அழுது புலம்புவீர்கள்.

(வாழும் காலத்திலேயே) நல்லது செய்ய முடியா விட்டாலும், பிறருக்குத் தீமை செய்யாது இருங்கள். அதுதான் எல்லாரும் விரும்புகின்ற தன்மை.

மேலும், அதுவே நம்மை நன்னெறியில் செலுத்தும் உயர்ந்த அழகிய உன்னதமான வழியும் ஆகும்.

எனவே, நல்லது செய்ய முடியவில்லை என்றாலும், அடுத்தவர்க்குக் கெடுதல் செய்யாமல் இருக்கலாம்.

தனக்கு வந்த துன்பம் பொறுத்துக் கொள்வதையும், பிறருக்கு துன்பம் செய்யக்கூடாது என்னும் எண்ணத்தையும் ஒரு தவமாக உறுதிப்பாட்டுடன் மேற்கொள்ள வேண்டும்.

உடல்வலி, மன வலியைத் தாங்குதல் மற்றும் பிற உயிர்களை ஓம்புதல் என்னும் நல்லுணர்வை வளர்த்துக் கொள்ளுவதே தவம் என்று திருவள்ளுவர் காட்டும் நடைமுறை நோன்புகளான இவற்றை மேற்கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

இந்நாளில் நோன்பு என வழங்கப்படுவதையே தவம் என்னும் சொல் குறிக்கின்றது. நோன்றல் என்றும் நோற்றல் என்றும் சொல்லப்படுவனவும் அதுவே. எனவே,

உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை,
அற்றே தவத்திற்கு உரு.

என்னும் திருக்குறளை அருளிச் செய்தார் வள்ளுவர்.

பின்வரும் பாடல்கள் இதனை விளக்குவதாக அமைந்துள்ளமை காணலாம்...

இருந்து வருந்தி எழில் தவம் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க என்றே,
இருந்து இந்திரனே எவரே எனினும்
திருந்தும் தம் சிந்தை சிவனவன் பாலே. --- திருமந்திரம்.

தவயோகிகள் ஓரிடத்தில் நிலையாக இருந்து, உடல் வருந்தத் தவம் செய்வார்கள்.

அப்படிப்பட்ட தவயோகிகளின் தவத்தைக் கலைத்து, அவர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கென்றே இந்திரன் பலவிதமான சூழ்ச்சிகளையும் செய்வான்.

இந்திரன் மட்டுமல்ல, யார் வந்து தவத்தைக் கலைக்க முயன்றாலும், தவயோகிகள் தம் மனம் சிவனவன் நினைவிலேயே மேலும் மேலும் பொருந்தி இருக்குமே தவிர, அவர்கள் தவம் கலையாது.

சிவயோகிகள் தமக்கு வரும் இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு தவத்தைப் புரிவர். தமது தவத்திற்கு இடையூறு செய்பவர்களுக்கு, இடையூறு செய்யமாட்டார்கள்.

ஏனெனில், அவரகள் கருதி இருக்கும் பரம்பொருள், அவர்களை முன்னின்று காக்கும். அடயோகம் செய்வோர்க்கு இது பொருந்தாது. "அசட்டு யோகி ஆகாமல், சிவயோகியாக அருள்" புரியுமாறு, முருகப் பெருமானை அருணகிரிநாதர் வேண்டுகின்றார்.

உயிர்நோய் செய்யாமை, உறுநோய் மறத்தல்,
செயிர்நோய் பிறர்கண் செய்யாமை – செயிர்நோய்

விழைவு வெகுளியினை விடுவான் ஆயின்
இழிவு அன்று இனிது தவம். --- சிறுபஞ்சமூலம்.

பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யாமையும், உறு நோய் தனக்குப் பிறரால் வரும் துன்பத்தை மறந்து விடுவதோடு, கோபத்தால் உண்டாகும் துன்பத்தைப் பிறரிடத்துச் செய்யாதிருந்து, குற்றத்தைச் செய்யும் துன்பத்தைத் தருகின்ற ஆசையும் கோபமும் ஆகியவற்றை ஒருவன் விட்டுவிடுவான் என்றால், அதுவே அவனால் செய்யப்படும் இனிமையான, தாழ்வில்லாத தவமாகும்.

(தாழ்வில்லாத தவம், அழிவில்லாத இன்பத்தைத் தரும் என்று பொருள்)

ஆசையும், அது நிறைவேறாத வழி உண்டாகும் கோபமுமே துன்பத்திற்கு எல்லாம் மூலகாரணம் ஆகும். எனவே, அவற்றை விட்டொழிக்க வேண்டும் என்பது புலப்படும்.

ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள் உடையத்
தாக்க அருந் துன்பங்கள் தாம் தலை வந்தக்கால்,
நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்
காக்கும் திருவத் தவர். --- நாலடியார்.

முயன்று தாம் மேற்கொண்ட நோன்புகள் உள்ளத்தில் தளர்வடையும்படி, போக்குதற்கு அரிய துன்பங்கள் தம்மிடம் வந்து அடைந்தால், எப்படியாவது அவற்றை எல்லாம் தாங்கிக் கொண்டு, தமது நோன்புகளை நிலை நிறுத்திக் கொள்ளும் வலிமை உடையவரே, தமது துறவறம் சிறக்க வாழுகின்ற பண்பு உடையவர் ஆவர்.

தூய்மை உடைமை, துணிவாம் தொழில் அகற்றும்
வாய்மை உடைமை, வனப்பு ஆகும், - தீமை
மனத்தினும் வாயினும் சொல்லாமை, மூன்றும்
தவத்தில் தருக்கினார் கோள். --- திரிகடுகம்.

மனத் தூய்மையினை உடையவராய் இருத்தல். மெய்நூல்களாலே துணிந்து சொல்லப்பட்ட நற்செய்கைகளைச் செய்வதில் உண்மை

உடையவராய் இருத்தல். மங்கையருடைய அழகாகிய தீமையைத் தருவதனை மனத்தால் நினையாமையும் வாயால் சொல்லாமையும். ஆகிய இம் மூன்றும் தவத்தில் நிற்பவருடைய கொள்கைகள் ஆகும்.

தாயுமானவர் பாடுகிறார். . . . . .

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நான்உன் திருவடிக்கே
கொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றாடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோபுலி யூரத்தனே. (தா.பா.403)

- புலியூர்ச் சிற்றம்பலத்தில் எழுந்தருளி இருக்கும் எம் தந்தையே!
- உன்னை வந்தடையச் செய்யவேண்டிய தவம் சிறிதும் இயற்றாத நான்,
- புதுப்பூவைப் பறித்துக் கொண்டு வந்து உனது திருவடியில் சாத்தி,
- உண்மை அன்பர் கூட்டத்துடன் கலந்து இருந்து
- கையிரண்டையும் தலைமேல் கூப்பி வணங்கி,
- ஆனந்தத்தால் ஆடி,
- கசிந்து உருகி,
- உய்யும்படிக்கு அருள் செய்வது எப்பொழுதோ?

"தவம் சிறிதும் இயற்றாத நான்" என்று வருந்துகிறார் தாயுமானவர். தவம் இயற்ற வீண் காலம் போக்க வேண்டாம் என்று எச்சரிக்கிறது வேதாத்திரியம்.

நன்றாக பத்மா சனத்தில் ஆழ்ந்து,
 நாள்போக்கத் தூங்கிவிடப் பழகிக் கொண்டு,
அன்றாடத் தேவைக்குப் பழம், பால், காய்கள்
 ஆகாரமாய் உண்டு, அறிவைப் பற்றி
என்றேனும், எவரேனும் கேள்வி கேட்க
 இடமின்றி மௌனம் என்றுஇருந்தீர்போதும்.
இன்றேனும் விழிப்படைந்து எழுந்து வாரீர்1
 ஈசன்நிலை எளிதாக உணர்த்து கின்றோம்." (ஞாக.பா.1443)

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


குருவே துணை
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
பரிபூரணானந்தம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
பொருள்
வணக்கம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
ஆனந்தமானபரம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
தேஜோமயானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

4.மவுனத்தினால் முத்தி சாதிக்கலாம்

ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான் அவனுக்கு எல்லாம் இருந்தாலும் மனதில் நிம்மதி இல்லாமல் ஒரே குழப்பதிலே இருந்தான்.

ஒரு ஜென் குருவை சந்தித்து ஐயா எனக்கு ஜென் கற்க ஆசை சொல்லிக் கொடுங்கள் என்றான்.

இவனின் அவசரமான பேச்சை கவனித்த குரு, இதோ பாரப்பா உன் மனம் ஒரு நிலையாக இல்லை, நான் என்னதான் கற்றுக்கொடுத்தாலும் உனக்கு புரியாது நீ போயிட்டு அப்பறம் வா என்கிறார்.

இருந்தாலும் இவன் விடவில்லை

ஐயா என்னால் போகமுடியாது தயவுசெய்து எனக்கு நீங்க ஜென் சொல்லித்தரேனும் மற்றும் எனக்கு நிறைய குழப்பங்களும் சந்தேகமும் இருக்கு அதெல்லாம் நீங்கதான் தீர்த்து வைக்கணும் என்கிறான்.

அப்படியென்றால் சரி நான் உன்னை எனது சீடனாக ஏற்றுக்கொள்கிறேன் ஆனால் ஒரு நிபந்தனை இங்கே நீ ஒரு ஆறுமாதம் மௌனவிரதம் கடைபிடிக்கவேண்டும் சரியா?

6 மாதம்மா சற்று யோசித்து சரிங்க ஐயா இருக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்தான்

ஆனால் 6 மாதம் கழித்து எனது சந்தேங்களை நீங்க போக்கணும் சரியா?

சரி சரி அதெல்லாம் உன் மனதில் வச்சிக்கோ நான் 6 மாதம் கழித்து உனது அனைத்து குழப்பங்களையும் நீக்குகிறேன் என்றார் குரு.

அதன்பின் அந்த பணக்காரன் ஆசிரமத்தில் சேர்ந்து மௌனவிரதத்தை கடைபிடிக்கிறார் அடுத்தடுத்து அவருடைய

நேரங்கள் முழுவதும் தியானம் , மந்திரம் ஜெபிப்பது, ஆன்மீக சொற்பொழிவை கேட்பது இப்படியே நாட்கள் ஓடியது

மெல்ல மெல்ல அவருடைய மனம் தெளிந்தது, முன்பு குழம்பிருந்த விஷயங்கள் எல்லாமே தெளிவாக புரிய ஆரம்பித்தது.

ஆறுமாதம் கழித்து குரு அவரை அழைத்தார், நீ மௌன விரதம் இருந்தது போதும் இப்போது உனது சந்தேகங்களை கேள் என்றார்.

உடனே அந்த பணக்காரன் அமைதியான குரலில் கேட்பதற்கு ஒன்றும் இல்லை குருவே எல்லா குழப்பங்களும் எனக்கு நீங்கியது இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று.

இந்த கதை நமக்கு உணர்த்துவது என்னவென்றால் "சும்மா கேள்வி கேட்டால் மட்டுமே நமக்கு பிரச்சனைகள் நீங்காது மற்றும் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடையமுடியாது சொல்லும் விசயங்களை கேட்டு சில மாதங்களோ அல்லது வருடங்களோ பயிற்சி செய்யவேண்டும் .

மனம் குழப்பம் என்றால் அப்படியேதான் இருக்கும் , சிலநேரங்கள் மௌனமாக மனதை கவனியுங்கள்

அப்போதுதான் மனம் தெளிவடையும் மனம் தெளிந்தால் தானாக எல்லாமே புரியவரும்

எண்ணாத தெண்ணிய நெஞ்சே துயரொழி என்னிரண்டு
கண்ணே உறங்குக என்னாணை முக்கட் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மவுனத்தி னால்முத்தி சாதிக்கலாம்
நண்ணாத தொன்றில்லை யெல்லா நலமு நமக்குளவே. (தா.பா.413)

- எண்ணாத எண்ணமெலாம் எண்ணி ஏங்கும் மனமே!
- நீ வருந்துவதைக் கைவிடு!
- என் இரண்டு கண்களே!
- நீங்கள் உறங்குங்கள்!
- என்மீது ஆணையிட்டுச்சொல்கிறேன்.
- மூன்று கண்களுடன் விளங்கும் அருட்பெருமானின் குளிர்ந்த அருளால் மோனமும்,
- அம்மோனத்தால் முத்தியும் சாதிக்கலாம்.
- கிடைக்கப் பெறாத நலம் என்று ஒன்று இல்லை.
- எல்லா நலமும் நமக்கு உண்டு.

மௌனம் என்னும் மந்திரமொழி வேதாத்திரியம்

மோனநிலையின் பெருமை யார் எவர்க்கு
முன்படர்ந்து வாயாலே சொல்லக்கூடும்?
மோன மே அ றிவினது அடித்தளம் ஆம்.
மிகவிரிவு! எல்லையில்லை! காலம் இல்லை!
மோனத்தில் அறிவு தோய்ந்து பிறந்தால்,
முன்வினையும் பின்விளைவும் நீக்கக் கற்கும்.
மோனநிலை மறவாது கடமை ஆற்ற,
மென்மை, இன்பம், நிறைவு, வெற்றி அமைதியுண்டாம்.(ஞாக.பா.1640)

வார்த்தைகள் இல்லாத புத்தகம் மௌனம். ஆனால் வாசிக்க வாசிக்க இதற்குள் வாக்கியங்கள்.

மௌனம் என்பது வெளிச்சம். நம்மை நாமே இதற்குள் தரிசிக்கலாம்.

மௌனம் என்பது இருட்டு. எல்லாத் துன்பங்களையும் இதற்குள் புதைக்கலாம்.

மௌனம் என்பது மூடி. இதைத் தயாரித்து விட்டால் எல்லா உணர்ச்சிககளையும் பூட்டி வைக்லாம்.

மௌனம் என்பது போதி மரம். இதுவரை சொல்லாத உண்மைகளை இது போதிக்கும்.

மௌனம் என்பது வரம். நம்மிடம் நாமே பெறுவது. இ ன பம், துன்பம் இரண்டையும மௌனம் கொண்டு சந்தித்தால் எப்போதும் இதயம் இயல்பாக இருக்கும். இதழ்களை இறுக மூடி நாம் நமக்குள் இறங்குவோம்.

அதிகம் பேசாதவனை உலகம் விரும்புகிறது. அளந்து பேசுகிறவனை உலகம் மதிக்கிறது. பேசாத ஞானியை உலகம் தொழுகிறது.

அமைதி மேலோட்டமானது. மௌனம் உள்ளிருந்து வருவது.

மௌனம் வார்த்தைகள் அற்ற நிலை. எண்ணங்கள் அற்ற நிலை. ஓம் எனும் பிரணவத்தின் பொருள் – அறிவாக உள்ள இறைவனை உயிராக உணர்கிற மனிதன், பேரின்ப நிலையாகிற மௌனத்தில் ஆழ்கிறான் என்பதே.

"தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை" என மாணிக்கவாசகர் கூறுகிறார்.

நம்மை முற்றிலும் அவருக்குக் கொடுகின்றளவு அவர் நம்மை ஏற்றுக்கொண்டு அவரை நமக்குக் கொடுத்து விடுகிறார்.

அவரை நாம் பெறுகின்றளவு பேரானந்தத்தை அனுபவிக்கும் பேற்றினைப் பெற்று மோன நிலையை அடைகின்றோம்.

பேரானந்தப் பெருங்கடலிலிருந்து வீசிய காற்று பட்டதும் நாரதர் தம்மை மறந்து பக்திப் பரவசமடைந்தார்.

எப்பொழுதும் "நாராயண, நாராயண" என்று உச்சரித்த வண்ணம் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தார்.

சுகர் பேரானந்தக் கடலைப் பார்த்தார். பார்த்தவுடன் உடல் உணர்வை எல்லாம் கடந்து ஞானப் பெருநிலையை அடைந்து விட்டார்.

மகாதேவர் அப் பேரானந்த கடலின் நீரை ஒருகை அள்ளிப் பருகினார். அது அவருக்கு போதுமானதாகப் போய்விட்டது.

இனி யார்தான் அதை முற்றிலும் அறியமுடியும், நம்மை நாம் அவருக்குக் கொடுக்கின்ற பொழுது அவர் நம்மை தம் வசம் ஆக்கிப் பேச்சற்ற பெருநிலையில் வைத்து விடுகின்றார்.

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

5.மௌனியே சற்குருவாய்

மகான்களுக்கும் வள்ளல்கள் வழிகாட்டியுள்ளனர். சுவாமி விவேகானந்தருக்கு இராமகிருஷ்ணர் வந்து வழிகாட்டினார்.

சகோதரி நிவேதிதைக்கு சுவாமி விவேகானந்தரும், பாரதியாருக்கு நிவேதிதை அம்மையாரும், வேதாத்திரி மகஷிக்கு பரஞ்சோதி மகானும் வழிகாட்டியது போல தாயுமானவருக்கு மௌனகுரு வழி காட்டினார்.

ஒரு மனிதன் ஞானம் அடைவதற்கு ஒரு குருவின் துணை மிகவும் அவசியம். தனியாக மனிதன் ஞானம் அடைய முடியாது. குரு இல்லாமல் ஞானம் இல்லை

.

குரு உபதேசம் மிகமுக்கியம். ஞான வேட்கை உள்ளவர்களுக்கே உபதேசம் கிடைக்கும். அவர்களாலேயே உபதேசத்தை புரிந்து கொள்ளவும் முடியும்.

உடனடியாக இல்லாவிட்டாலும், சற்று தாமதமாகவாது. குரு உபதேசித்த வழி நடந்தாலே ஞானம் சித்திக்கும்.

மனதை அறிவினிடத்து செலுத்துவதற்கு குரு வழிகாட்டுகிறார் என்பதை “கை காட்டி” எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

மௌன குரு வடிவத்தில் தமக்கு ஞான வழியைக் காட்டித் தந்த பேற்றினைத் மௌனகுருவாகி வந்து என்கிறார்.

"எளியேனுக்கு மௌனியே சற்குருவாய் எழுந்தருளி, இரக்கம் காட்டினனே!" என்று தமது குருவை புகழ்கிறார் தாயுமானவர்.

தானந் தவஞ்சற்றும் இல்லாத நான்உண்மை தானறிந்து
மோனம் பொருளெனக் கண்டிடச் சற்குரு மோனனுமாய்த்
தீனன் தனக்கிங் கிரங்கினை யேஇனிச் சிந்தைக்கென்றும்
ஆனந்தந் தானல்லவோ பரமே சச்சிதானந்தமே. (தா.பா.415)

- மேலான பொருளே!
- சத்து. சித்து. ஆனந்தமே!
- தானம் தவம் என ஒரு சிறிதும் செய்யாத நான்,
- உண்மை இன்னது என்பது அறிந்து.
- மௌனமே மெய்பொருள் எனக் கண்டு,
- எளியேனுக்கு மௌனியே சற்குருவாய் எழுந்தருளி,
- இரக்கம் காட்டினனே!
- இனி என் சித்தத்தில் என்றும் விளைவது பேரின்பம் அல்லவோ?

"குரு வணக்கம்" வேதாத்திரியம்

அண்டமதில் உருவெடுத்து அறிவைப் பெற்று
அவ்வறிவு ஒன்றுமுதல் ஆறதாகிக்
கொண்டமேலாம் இவ்வுருவில் குறிப்பில்லாமல்
கோடான கோடியெண்ணி அனுபவித்துக்
கண்டபலன் எனையறிய நினைந்தேனப்போ
கனல்மூட்டிக் கருவெழுப்பிக் கருத்துணர்த்தி
குண்டலினியெனும் என் மெய்யுணர் வெழுப்பிக்
குறித்து எனையறிவித்த குருவே அன்பே". (ஞாக.பா.5)

அறிவு இயக்கமற்ற நிலையிலே உள்ள இருப்பு நிலைக்குப் போகும் அளவுக்கு நுண்மை பெற்றபோது அதுவும், பிரம்மம் (ஆதி) என்ற ஒரு நிலையம் ஒன்றுபட, அந்த இடத்தில் அறிவு அசைவற்று நின்று, ஆதியும் அறிவும் ஒன்றாகி விடுகிறது.

அந்த குறிப்பைத் தான் சமம் + ஆதி = சமாதி என்று சொல்வார்கள்.

ஆதிக்குச் சமமாக அறிவு நிற்கும் நிலைதான் 'சமாதி'. இந்த நான்கையும் மனோபயிற்சியாக, பதஞ்சலி யோக சூத்திரத்தில் சொல்வார்கள். நாம் "மனவளக்கலை" என்கிறோம்.

உயிர் மேலே எழுப்பப்பட வேண்டும். அதன் இயக்கத்தை, இயக்க மையத்தை மாற்றியமைக்க வேண்டும். அதுவே யோகத்திற்கு முதல் படியாகும்.

அதற்கென நீண்ட காலம் செலவிட முடியாது. நாம் "உலக சமுதாய சேவா சங்கத்தின்" மூலமாகக் "குண்டலினியோகத்தை" வெகு எளிமையாக்கி விட்டோம்.

மூச்சுப் பயிற்சி வேண்டியது இல்லை. மந்திர ஜெபம் தேவை இல்லை. முதலிலேயே அந்தப் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் போதிய ஆற்றல் பெற்றிருக்கிறார்கள்.

அந்த ஆற்றலைக் கொண்டு மூலாதாரத்தில் தொட்டு, மேலே கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார்கள். இதை ஸ்பரிச தீட்சை என்று சொல்வார்கள்.

தொட்டு உணர்த்திய உடனே, பயிற்சியாளர் குருவின் ஆற்றல் மூலம் தனது உயிராற்றலை உணர்கிறார் (□□□ □□□□ □□□□□ □□ □□□ □□□□□□□□ □□□□□□□□□ □□ □□□ □□□□ □□□□□ □□ □□□ □□□□□□) அதுதான் உண்மை.

குருவே வந்து, உயிர்ச்சக்தியைக் கொடுத்து விடுகிறாரா என்றால் இல்லை. தூண்டி விடுகிறார்.

தன்னுடைய ஆற்றலைச் சிறிது பாய்ச்சி, அதை வேகம் கொள்ளச் செய்து தூண்டிவிடுவது (St□□□□□□□) தான் குருவின் ஆற்றல்.

ஆனால் தூண்டும் போது 'பாலுக்கு உரை ஊற்றுவது' போல, குருவினுடைய தன்மையையும் அடைகிறது.

அறிவில் முழுமை பெற வேண்டும் என்ற எண்ணமும், இறைநிலையை அடைய வேண்டும் என்ற ஒரு பொறுப்பும் வர வேண்டுமானால் அதற்கு உயிர் அறிந்தவர்களுடைய உயிர் (தீட்சை) சேர வேண்டும்.

குருவின் உயிர்ச்சக்தியும் சிறிது சேரும்போது தான் உடலோடு எடுத்த பிறவி மாத்திரம் அல்லாது, அறிவுக்கு ஒரு பிறவியும் உணடாகி விடுகிறது என்பது வேதாத்திரியம்

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

6.அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்?

அன்பைப் பற்றி ஆனந்த் மேடையில் சொன்ன ஒவ்வொரு உவமைகளையும், வர்ணனைகளையும் கேட்ட பார்வையாளர்கள், அரங்கமே அதிரும்படி கைதட்டிக் கொண்டிருந் தார்கள்.

பார்வையாளர்களின் கைதட்டல் தந்த உற்சாகத்தில் ஆனந்துக்கு அவனையறியாமல் கருத்துக்கள் ஊற்றெடுத்துவர, பிரமாதமான உரையாற்றி முடித்தான்.

கூட்டம் முடிந்ததும், அரங்கத்தில் பலர் ஆனந்திடம் வந்து கைகுலுக்கி வாழ்த்திவிட்டுச் சென்றார்கள்.

கூட்டத்திலிருந்து திடீரென்று ஆனந்தின் எதிரில் வந்த முதியவர் ஒருவர், “தம்பி, நல்லா பேசினீங்க. அன்பைப் பற்றி எவ்வளவு

அழகா சொன்னீங்க. சுயநலம் பெருகிவிட்ட இந்தக் காலத்துல உங்களை மாதிரி அன்பைப் பற்றி எடுத்துச் சொன் னாதான் மற்றவங்களுக்குப் புரியும்.. என்று சொல்லிப் பாராட்டினார்.

“ஐயாவுக்கு எந்த ஊர்? என் பேச்சை இதுக்கு முன்னாடி கேட்டிருக் கீங்களா? - கேட்டான் ஆனந்த்.

“இல்லை தம்பி.. நான் வெளியூர். வரன் பார்க்கிற விஷயமா இங்கே வந்தேன். எங்க ஊருக்கு ராத்திரி தான் பஸ். அதுவரைக்கும் நேரம் போகணுமேன்னு இங்கே வந்தேன்!”

“உங்க பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கறீங்களா ஐயா? -கேட்டான் ஆனந்த்.

“என் பொண்ணுன்னே வெச்சுக் கோங்களேன். என் அண்ணன் பொண்ணு. அண்ணன் சின்ன வயசுலயே விபத்துல போய்ட்டார். அவரோட ரெண்டு பொண்ணு, ஒரு பையன் எல்லாரையும் நான்தான் வளர்த்தேன். எல்லாரையும் படிக்க வெச்சு ஆளாக்கி, ரெண்டுபேருக்கு கல்யாணமும் பண்ணி வெச்சுட்டேன். கடைசி பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடிட்டிருக்கேன். மாப்பிள்ளை பையன் இந்த ஊர்லதான் டீச்சரா இருக்கார்னு தெரிஞ்சு பார்த்துட்டு போக வந்தேன். இனிதான் என் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டியதைச் செய்யணும் என்று பெரியவர் சொல்லிவிட்டு நகர்ந்து செல்ல, சுருக்கென்று இருந்தது ஆனந்துக்கு.

‘அண்ணன் பிள்ளைகளை தன் பிள்ளைகளாய் வளர்த்து ஆளாக்கிய இந்தப் பெரியவர் எங்கே? சொந்த அப்பா அம்மாவை என்னுடன் வைத்திருந்தால் சுதந்திரம் இருக்காது என்று, என்னைவிட வசதியற்ற தம்பியின் வீட்டுக்கு அனுப்பிவிட்ட நான் எங்கே?

அன்பு என்பது மேடையில் பேசுவதற்கானதா? வாழ்க்கையில் நாம் காட்ட வேண்டிய உணர்வு அல்லவா?'

யோசித்த ஆனந்த், மறுநாளே அம்மா, அப்பாவை தன்னுடன் அழைத்துவர தீர்மானித்தான்... கூடவே வெறுமனே அன்பு பற்றிய பேச்சைக் குறைத்துவிட்டு பொது சேவையில் ஈடுபடுவதற்கும் ஈடுபட்டான்.

கல்லால் எறிந்துங்கை வில்லால் அடித்துங் கனிமதுரச்
சொல்லால் துதித்தும்நற் பச்சிலை தூவியுந் தொண்டரினம்
எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே. (தா.பா.422)

- கொல்லா விரதம் பூண்ட மெய்யடியார்களுக்கு காட்சி கொடுக்கும் மூன்று கண்ணுடைய குருமணியே!
- கல்லால்அடித்து சாக்கியனும்,
- வில்லால்அடித்து அருச்சுனனும்,
- இனிமையான சொற்கள் கொண்டு துதிப்பாடல்கள் பாடி நால்வர் பெருமக்களும்,
- நல்ல பச்சிலை முதலியன கொண்டு வழிபட்டு அடியார்கள் பலரும்,
- என இவ்வாறு ஒரு பெரிய தொண்டர் கூட்டமே பிழைத்துக் கொண்டது.
- அன்பு இல்லாதவனாகிய நான் இவற்றுள் எதனைச் செய்து. உய்யப் போகிறேன்?

அன்பு – வேதாத்திரியம்

அறிந்தது சிவம், மலர்ந்தது அன்பு?

இறைவனிடம் ஏதோ பெற வேண்டும் என்று நினைக்கிறபோது அது உணர்வு தான் அவனே தான் இந்த நிலையிலே சிக்கிக் கொண்டு அந்தந்த இடத்துக்குத் தக்கவாறு இன்பத்தையும் அனுபவிக்கிறான்; துன்பமும் அடைகிறான்.

அந்த இடத்தில் நான் அந்தத் துன்பத்தை நீக்க வேண்டும் என்ற கருணையானது உள்ளத்திலே எழுமேயானால் அதுதான் உறவு.

அந்த உறவை, உண்மையான உறவை, அவனோடு கொண்ட போது அதிலிருந்து அறம் எப்படி உண்டாகிறது?

சேவையாக உண்டாகிறது. அப்பொழுது, அறிந்தது சிவம். இங்கே என்ன? காட்டுவது அன்பு. சிவம் என்ற ஒரு நிலையை அறிவு உணர்ந்தது; அது செயல்படும்போது அன்பாக மலர்ந்தது.

அப்பொழுது அன்பு என்பது என்ன என்று பார்க்கும்போது சிவத்தின் செயலே; பூரணமாக சிவத்தின் செயலே. செயலிலே விளைவாக எப் பொழுதும் வந்து கொண்டிருப்பது சிவத்தின் செயல்.

ஆகவே, நல்ல செய லையே செய்வேன் என்று ஒவ்வொருவரும் உணர்ந்து மதித்து அந்த உறவு கொண்டு கடமையாற்றி வருவது அதுவே சிவயோகம், எப்பொழு துமே சிவயோகம் தான்.

எந்தப் பொருளிலேயும் அவனைக் காணலாம்; எந்த நிலையிலேயும் அவனைக் காணலாம்; அவனாகவே இருக்கலாம். அவனோடு உறவாக இருக்கலாம்; உறைந்து இருக்கலாம்.

உடலால் வேறுபட்டு இருந்தாலும் உள்ளத்தால், அறிவால், ஒன்றுபட்டு இருப்பதை உணரலாம்.

இந்த நிலைக்கு அறிவை உயர்த்தவல்லது, அறத்தை உணர்த்தவல்லது தவமும், அகத்தாய்வும்;

அந்த தவமும் அகத்தாய்வும் நீங்கள் பெற்று விட்டீர்கள், செய்து கொண்டு வருகிறீர்கள், அதனுடைய பலனை உணர்ந்து கொண்டும் இருக்கிறீர்கள்.

அதனை ஆழமாக மேலும் ஆழமாகச் சிந்தித்துச் செயல்படுத்தி பயனடையுங்கள். நீங்களும் பயனடைந்து மற்றவர்களுக்கும் அந்தப் பயன் வீசட்டும

தாயுமானவர் வேதாத்திரியார் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

7. சீடரிடம் கொண்ட குருவின் அன்பு

அந்த குருகுலமே பரபரப்பானது. சீடர்கள் அனைவரும் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தனர்.

பின்னே இருக்காதா? இவ்வளவு வருடமாக தங்களுக்கு நற்போதனைகளை மட்டுமே கற்பித்து வந்த குருவை, திருட்டுப் பட்டம் சுமத்தி சிறையில் அடைத்துவிட்டார்கள் என்று அறிந்தால் எந்த சீடன்தான் பொறுத்துக் கொண்டு இருப்பான்.

குரு, அரசாங்க வீரர்களால் கைது செய்யப்பட்டு, அரசனின் முன்பாக நிறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

சீடர்கள் அனைவரும் அரண்மனைக்குச் சென்று தங்கள் குருவை விடுவிக்க வேண்டும் என்று கேட்டனர்.

ஆனால் அங்கு விசாரித்ததில், குருவே தான்தான் இந்த குற்றத்தை செய்தேன் என்று ஒப்புக்கொண்டு விட்டதாகவும், அதனால்தான் சிறையில் அடைத்ததாகவும் பதில் அளிக்கப்பட்டது.

சீடர்கள் அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போயினர். அவர்களால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை.

ஆறு மாதம் கழிந்தது. சிறையில் இருந்து வெளியே வந்த குரு, அடுத்த சில நாட்களிலேயே வேறு ஒரு குற்றத்திற்காக மீண்டும் சிறை சென்றார்.

இப்படி சின்னச் சின்ன குற்றங்களைச் செய்வதும், அதன் காரணமாக அடிக்கடி சிறைச் சாலைக்கு செல்வதுமாக இருந்தார்.

இதனால் அவரை மக்கள் அனைவரும் ‘சிறைச்சாலை குரு’ என்றே அழைக்கத் தொடங்கினர்.

